1992 செப்டம்பர் 23]

உரிமைக் கொடுத்து தொழிலாளர்களாக அமர்த்தவும், இந்தத் தொழிற்சாலையில் தமிழக அரசின் பங்கு எவ்வளவு சதவீதம் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறமையின் அடிப்படையில்தான் இதுபோன்ற பெரிய தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பைக் கொடுக்க முடியும். இந்தத் தொழிற்சாலை, மணலி எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம்—மெட்ராஸ் ரிஃபைனரிஸ் லிமிடெட் மற்றும் சதர்ன் பெட்ரோ கெமிகல்ஸ் தொழில் நிறுவனம்—ஸ்பிக் இணைந்து நிறுவ இருக்கின்ற நிறுவனமாகும். எனவே, ஸ்பிக்கில் தமிழ்நாடு அரசுக்கு ஷேர்கள் இருக்கின்றன. இந்த தொழிற்சாலையைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு அரசுக்கு எந்தவிதமான பங்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 43. திரு. எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு நிதி அமைச்சர்.

43—

பரிசுச் சீட்டுகள் தனியார் அச்சகத்தில் அச்சிடுதல்.

* 10636— திரு. எம். ஆண்டி அம்பலம் ;

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசின் பரிசுச் சீட்டுகள் தனியார் அச்சகங்களில் அச்சிடப்படுகின்றனவா?

(ஆ) அரசு அச்சகங்கள் அல்லது தமிழரசு அச்சகத்தில் அவற்றினை அச்சிட அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்கள் ' ஆம் ' என்று சொல்லிவிட்டார். ஆனால், கோயம்புத்தூர், மதுரை, சென்னை போன்ற அரசு அச்சகங்களில் எவ்வளவு பேர் வேலை

செய்கிறார்கள்? அந்த அரசு அச்சகங்களிலே—தனியாருக்குக் கொடுக்கப்பட்ட இந்த சீட்டுகளை அச்சிடுவது சம்பந்தமாக அரசு பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் த்லைவர் அவர்களே, 1962 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள் தமிழ்நாடு அரசு அச்சகத்தில் அச்சடிக்கப்டட்டு வந்தன. அரசு அச்சகத்தில் அப்போது ஆஃப்செட் முறையில் வண்ணத்தில் அச்சடிக்கப் போதுமான நவீன இயந்திரங்கள் இல்லாமையினால் பரிசுச் சீட்டுகளை தனியார் அச்சகத்தில் அச்சடிக்க அரசு ஆணை பிறப் பித்தது. தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விதி எண் 11-ன்படி-தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகளை அரசு அச்சகத்திலோ அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் கோரி தனியார் அச்சகத்திலோ அச்சடிக்க லாம். தமிழ்நாடு பரிசுச் சீட்டு துறைக்கென்று ஒரு அச்சகம் தனியாக இல்லை. பரிசுச் சீட்டு விற்பனையில் நிலவிவரும் போட்டிக்கு ஏற்ப பல வண்ணங்களில், கண் கவர் படங்களுடன் பரிசுச் சீட்டுகளை அச்சடிப்பது மிகவும் அவசியமாகிறது. எனவே தான் தனியார் அச்சகத்தில் பரிசுச் சீட்டுகளை அச்சடிக்க ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு அரசின் அனுமதி பெற்று ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்து, இயக்குநர் தனியார் அச்சகத்தில் மிகுந்த பாதுகாப்பு உறுதியுடன் தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டுப் பெறுகிறார். போலி சீட்டுகளை தவிர்க்கும் எண்ணத்தில் நல்ல பாதுகாப்பு முறை கடைபிடிக்கப்பட்டு வரு கிறது. என்றாலும் சமீபத்தில் பரிசு சீட்டுத் துறை இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சகத்துறை இயக்குநர் கலந்துரையாடி தற்போது தனியார் ஒப்பந்தப் புள்ளி முடிந்தவுடன் 1993-ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டுகளை அரசு அச்சகத்தில் அச்சடிப்பதற்கான சில இயந்திரங்களை வாங்க கருத்துரு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அதனை அரசு பரிசீலனை செய்து வருகிறது. பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 9-55.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் தமிழரசு அச்சகத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. அந்த தமிழரசு அச்சகத்தில் பரிசு சீட்டு கள் அடிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட் டேன். தமிழரசு அச்சகத்தில் போதுமான அளவுக்கு வண்ண

வகைகளில் அச்சடிப்பதற்கு இப்போது வசதிகள் இல்லை. மேலும் சில இயந்திரங்கள் வாங்க வேண்டுமென்று ஒரு செயற் குறிப்பை தமிழரசு அச்சகத்தினர் அனுப்பி இருக்கிறார்கள். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த தற்குப் பிறகு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் டிக்கட்டுகள் அச்சடிக்கிறபோது அங்கே யிருக்கிற ஏஜண்டுகளே போலியான டிக்கட்டுகளை அச்சடித்து விநியோகிப்பதாக அறிகிறோம். அதைக் கண்டுபிடிப்பதற்கு ஆய்வாளர்கள் நியமிக்கப்படுவார்களா என்பதை அறிவதோடு பரிசு விழுந்து வாங்காமல் இருக்கிறார்களா, அப்படியானால் எவ்வளவு தொகை அரசிடம் அந்த வகையில் இருக்கிறது என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யூகத்தின் அடிப்படையில் வினாவை எழுப்பி இருக்கிறார்கள். நான் ஏற்கனவே மூல வினாவிற்கு விடை அளிக்கிறபோது தெளிவாகக் குறிப் பிட்டேன். தனியார் அச்சகத்தில் பரிசு சீட்டுகளை அச்சடிக்கும் போது ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படுகின்றன. அந்த ஒப்பந்தப் புள்ளிகளில் ஏற்ற ஒப்பந்தப்புள்ளி அரசால் ஏற்றுக் கொள்ளப் பட்டதற்கு பிறகு அச்சடிக்க விடப்படுகிறது. அங்கே அச்ச கத்தில் தகுந்த பாதுகாப்பு உறுதியுடன் தமிழ்நாடு பரிசு சீட்டு களை அச்சடித்து வருகிறோம். அதற்கு உரிய அதிகாரிகள் இருக்கிறார்கள். போலி சீட்டுகளை அவர்கள் அச்சடிக்காமல் இருப்பதற்குத்தான் தக்க பாதுகாப்புக்காக காவல்துறையினரோடு இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் இருந்து அச்சடிக் கிறார்கள். இதுவரையில் அப்படிப்பட்ட போலி சீட்டு— தமிழகத்தில் கிட்டத்தட்ட 20 ஆண்டுக்காலத்திற்கு மேலாகஇந்தப் பரிசு சீட்டு முறை நடைமுறையில் இருக்கிறது என்றாலும் போலி சீட்டு தமிழகத்தைப் பொறுத்த வரையில் உருவாக்கப்பட்டது அல்லது பரப்பப்பட்டது என்கிற நிலை ஏற்படவில்லை. வேறு சில மாநிலங்களில் கூட அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அடுத்த ஆண்டு கிட்டத்தட்ட 1993-ஆம் ஆண்டு புதிய இயந்திரங்கள் எல்லாம் வாங்கப்பட்டதற்கு பிறகு அரசு அச்சகத்திலேயே அச்சடிக்கிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறபோது இப்படிப்பட்ட சந்தேகத்திற்கு கூட இடம் ஏற்படாது என்பதைக் கூறிக் கொள்ள நான் விரும்புகிறேன். பரிசு சீட்டுகள் எவ்வளவு இருக்கின்றன, எவவளவு விற்காமல் இருக்கின்றன என்பதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.